வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3889 / ஆ 4 / 2022 நாள் – 09–2022

பொருள் பள்ளிக் கல்வித் துறை – தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2022–2023ம் கல்வியாண்டு – அனைத்து வகை பள்ளி மாணவர்களுக்கு காலாண்டுத் தேர்வுகள் நடத்துதல் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

.....

மேற்காண் பொருள் சார்பாக 2022–2023ம் கல்வியாண்டிற்கான அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குண்டான காலாண்டுத் தேர்வுகள் அட்டவணை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக இணையதளத்தில் வெளியிடப்பட்டது. தேர்வுக்கால அட்டவணையின்படி தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். மேலும் கீழ்காணும் கூடுதல் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது,

1. பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திற்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கு தேவையான வினாத்தாள்கள் பெறப்பட்டுள்ளதா மற்றும் பாடம் வாரியாக போதுமான வினாத்தாட்கள் உள்ளதா என உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

2. தேர்வுக் கால அட்டவணையில் தெரிவித்துள்ள நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

3. தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தேர்வு நேரம் முடிவுற்ற பின்பு தான் மாணவர்களிடமிருந்து விடைத்தாட்கள் பெறப்பட வேண்டும். தேர்வு நேரம் முடியும் முன்னரே விடைத்தாட்கள் பெறப்பட கூடாது.

4. ஒவ்வொரு தேர்வு நடைபெறும் நாள் அன்று காலை 08.00 மணிக்கும், பிற்பகல் 12.00 மணிக்கும் வினாத்தாட்களை வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து தனி நபரின் முகப்பு கடிதத்துடன் அனுப்பி வினாத்தாட்கள் பெற்று தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

5. எக்காரணம் கொண்டு பிற்பகலில் நடைபெறும் தேர்விற்குண்டான வினாத்தாட்களை காலையில் வழங்கப்பட கூடாது என வினாத்தாள் கட்டுக்காப்புமைய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

6. காலாண்டுத் தேர்வுகள் முடிவுற்றவுடன் விடைத்தாட்கள் மதிப்பீடு செய்து வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக இணையதளத்தில் 11-10-2022 அன்று மதிப்பெண் விவரங்களை உள்ளீடு செய்யப்பட வேண்டும்.

7. தேர்வுகள் நடைபெறும் நாள் அன்று மீதமுள்ள சார்ந்த பாட வினாத்தாட்களை மந்தன முறையில் தலைமை ஆசிரியர்கள் தங்களது பாதுகாப்பில் வைத்துக் கொள்ளவேண்டும்.

8. வினாத்தாட்களை எக்காரணம் கொண்டு அலைபேசியில் புகைப்படம் எடுக்க கூடாது. மற்றவர்களிடம் பகிரவும் கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

9. காலாண்டுத் தேர்வுகளை எந்தவித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் நடத்தி முடிக்க அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும்

மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.